# மணப்பாறை நகராட்சி

**2020- ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் (28.04.2020) 28 – ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 04.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 28.04.2020 | **பொருள் – 1**<br>இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் விநியோகம் செய்யும் குடிநீரில் கேஸ் குளோரின் கலந்து விநியோகம் செய்ய ஏதுவாக வார்டு எண்.4-ல் பொத்தமேட்டுப்பட்டியில் கேஸ் குளோரினேசன் பிளான்ட் அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. மேற்படி Gas chlorine Plant அமைக்கப்பட்டு மூன்றாண்டுக்கு மேல் கடந்து இயங்கி வருவதால் பராமரிப்பு செய்யாமல் உள்ளதால் அடிக்கடி பழுது ஏற்பட்டு இயங்குவது தடை ஏற்பட்டு உள்ளது. எனவே பொது மக்களின் உடல் நலன் கருதியும், டெங்கு கொசு புழுக்களை அளித்து டெங்கு காய்ச்சல் ஏற்படுவதை தடுக்கும் வகையிலும் தங்கு தடையின்றி Gas chlorine Plant இயங்குவதற்கு பிளான்டிற்கு தேவையான பராமரிப்பு பணிகளை திருவாளர்கள் ஆர்.கே.எண்டர்பிரைசஸ், பாலக்காடு, கேரளா நிறுவனத்தினர் மூலம் பராமரிப்பு மேற்கொண்டதற்கு தொகை ரூ.53,690/- ஐ தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு-15-ன் படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர்/ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது<br><br>**அலுவலக குறிப்பு:**<br>1.பதிவு செய்யலாம்<br>(ந.க.எண்:1107/2020/இ1) | **தீர்மான எண்.767 அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| 28.04.2020 | **பொருள் – 2**<br>நகராட்சி நிர்வாக ஆணையாளர் , சென்னை அவர்களின் கடிதம் ந .க.எண்.5437/2020/J1 நாள்.15.03.2020-ன்படி, கொரோனா தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதன் பகுதியாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள மூன்று எண்ணிக்கையிலான பிளக்ஸ் (10X8') பதாகை, உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று ரூ .7500/- மதிப்பீட்டில் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் நூர் டிஜிட்டல் , மணப்பாறை நிறுவனம் மூலம் பெறப்பட்டது மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>:-**<br>பதிவு செய்யலாம்<br>(1003/2020/எச்2) | **தீர்மான எண்.768**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 28.04.2020 | **பொருள் – 3**<br>நகராட்சி நிர்வாக ஆணையாளர் , சென்னை அவர்களின் கடிதம் ந .க.எண்.5437/J1/2020/4&5 நாள்.23.03.2020-ன்படி, கொரோனா நோய் தடுப்பு பணிகளுக்காக ஸ்பிரே இயந்திரம் ஏப்ரன் , பாதுகாப்பு கண்ணாடி , தெளிப்பான்கள், ஏர்கன் ஆகியவற்றை ரூ .94,460/- மதிப்பீட்டில் விலைப்புள்ளிகள் பெற்று சரம் என்விரோ (பி)லிட், சென்னை நிறுவனத்திடமிருந்து தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் பெறப்பட்டது மன்றத்தின் பதிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>:-**<br>பதிவு செய்யலாம்<br>(1003/2020/எச்2) | **தீர்மான எண்.769**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 28.04.2020 | **பொருள் – 4**<br>நகராட்சி நிர்வாக ஆணையாளர் , சென்னை அவர்களின் கடிதம் ந .க.எண்.5437/2020/J1 நாள்.15.03.2020-ன்படி, கொரோனா தடுப்பு பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு கிருமிநாசினியான சோடியம் ஹைபோகுளோரைடு விலைப்புள்ளி பெற்று ரூ .165380/- மதிப்பீட்டில் 10,000/- லிட்டர் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் பெற்றமை மன்றத்தின் பதிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>:-**<br>பதிவு செய்யலாம்<br>(1003/2020/எச்2) | **தீர்மான எண்.770**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| 28.04.2020 | **பொருள் – 5**<br>சார் ஆட்சியர் ஸ்ரீரங்கம் அவர்கள் அறிவுரையின்படி , மணப்பாறை நகராட்சி பகுதியில் பொதுமக்கள் வெளியில் அதிகளவில் கூடுவதை தவிர்க்க வாரம் 1 நாள் மட்டுமே வெளியே வர அனுமதி சீட்டு ரூ.28875/- மதிப்பீட்டில் விலைப்புள்ளிகள் பெற்று சோனா பிரின்டர்ஸ் மணப்பாறை நிறுவனம் மூலம் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டது மன்றத்தின் பதிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:-**<br>பதிவு செய்யலாம்<br>(1003/2020/எச்2) | **தீர்மான எண்.771 அனுமதிக்கப்பட்டது.** |
| 28.04.2020 | **பொருள் – 6**<br>இந்நகராட்சி பொது சுகாதர பிரிவில் கொரோனா நோய் தடுப்பு பணிக்காக கிருமிநாசினி தெளிக்கும் பணியாளர்களின் பாதுகாப்பிற்காக 100 எண்ணம் முழு கவச உடை 1 லட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் பெறப்பட்டமை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:-**<br>பதிவு செய்யலாம்<br>(1003/2020/எச்2) | **தீர்மான எண்.772 அனுமதிக்கப்பட்டது.** |
| 28.04.2020 | **பொருள் – 7**<br>இந்நகராட்சி பொது சுகாதர பிரிவில் கொரோனா நோய் தடுப்பு பணிக்காக கூடுதலாக மருந்து தெளிக்கும் பணியாளர்களுக்கு 100 எண்ணம் முழு கவச உடை மற்றும் 5000 எண்ணம் முகக்கவசம் ரூ .121590/- மதிப்பீட்டில் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் பெறப்பட்டமை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:-**<br>பதிவு செய்யலாம்<br>(1003/2020/எச்2) | **தீர்மான எண்.773 அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| 28.04.2020 | **பொருள் – 8**<br>இந்நகராட்சி பகுதியில் கொரோனா நோய் தடுப்பு பணிக்காக கிருமிநாசினியான சோடியம் ஹைபோகுளோரைடு 5000லிட்டர் ரூ.82600/- மதிப்பீட்டில் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் பெறப்பட்டது மன்றத்தின் பதிவு செய்யலாம்.<br>**அலுவலகக்குறிப்பு:-**<br>பதிவு செய்யலாம்<br>(1003/2020/எச்2) | **தீர்மான எண்.774**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 28.04.2020 | **பொருள் – 9**<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைவர் , சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.74/TNPCB/F.007641/BMWM/2020-1 நாள்.28.04.2020-ன்படி, மணப்பாறை நகராட்சி சேகரம் ஆகும் கொரோனா நோய் தொடர்பான மருத்துவ கழிவுகளை இறுதியாக்கம் செய்ய மாசு கட்டுப்பாடு வாரிய அங்கீகாரம் பெற்ற நிறுவனமான M/S.Medicare Enviro Systems 270,M/G, Housing Unit, Pudukkottai Road, Thanjavur நிறுவனத்தின் மூலம் இறுதியாக்கம் செய்யவும் அதற்கான 3 மாத பணிகளுக்கான தோராய செலவினம் ரூ .60,000/- செலவினம் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது<br>**அலுவலகக்குறிப்பு:-**<br>அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.775**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 28.04.2020 | **பொருள் – 10**<br>இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மணப்பாறை சட்ட மன்ற உறுப்பினர் திரு.R.சந்திரசேகர் அவர்கள் கீழ்க்கண்ட பகுதிகளில் கள ஆய்வு செய்ததில் அப்பகுதியில் உள்ள பொதுமக்களின் குறைகளை பெற்று நடவடிக்கை மேற்கொள்ள கீழ்க்கண்ட பணிகளை துரிதமாக செய்து தருமாறு அறிவுறுத்தினார். | **தீர்மான எண்.776**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீடு (ரூ.இலட்சத் தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண் :4 பொத்தமேட்டுப்பட்டி மழைநீர் வடிகால் அமைத்தல் | 9.50 |
| 2 | வார்டு எண் :4 பொத்தமேட்டுப்பட்டி குறுக்கு சாலை பேவர் பிளாக் அமைத்தல் | 9.50 |
| 3 | வார்டு எண் :11 அண்ணாநகர் குறுக்கு சாலை பேவர் பிளாக் அமைத்தல் | 5.00 |
| 4 | வார்டு எண் :20 மணப்பாறைப்பட்டி மெயின் சாலை மழைநீர் வடிகால் மற்றும் சிறு பாலம் அமைத்தல். | 9.90 |
| 5 | வார்டு எண் :5 வாரசந்தை பகுதியில் பேவர் பிளாக் ம்ற்றும் இதர பணிகள் அமைத்தல் | 9.75 |
| 6 | வார்டு எண் :20 மணப்பாறைப்பட்டி குறுக்கு சாலையில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 5.00 |
| 7 | வார்டு எண் :24 வெள்ளக்கல் பகுதியில் பேவர் பிளாக் அமைத்தல் | 9.75 |
| 8 | வார்டு எண் :12 நகராட்சிக்கு சொந்தமான பூங்காவில் நடைபாதை மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளுதல் | 9.75 |
| 9 | வார்டு எண் :12 நகராட்சிக்கு சொந்தமான பூங்காவில் கழிப்பிடம் மற்றும் தண்ணீர் வசதி ஏற்படுத்தும் பணி | 9.50 |

மேற்கண்ட பணியினை பொது நிதி 2020–21–ன் கீழ் பணிகள் மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்

| | | |
|---|---|---|
| 28.04.2020 | **பொருள் – 11**<br>இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ்க்கண்ட பகுதிகளில் உள்ள பகிர்மான குழாய் மற்றும் சிறு மின் விசை பம்புகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><table><tr><th>வ. எண்</th><th>வேலையின் விபரம்</th><th>மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்)</th></tr><tr><td>1</td><td>வார்டு எண் :1 முதல் 27 வார்டுகளில் உள்ள பகிர்மான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் பணி</td><td>9.75</td></tr><tr><td>2</td><td>வார்டு எண் :1 முதல் 27 வார்டுகளில் உள்ள சிறு மின் விசை பம்புகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் பணி</td><td>9.90</td></tr></table><br>மேற்கண்ட பணியினை குடிநீர் நிதி 2020–21–ன் கீழ் பணிகள் மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம் | **தீர்மான எண்.777 அனுமதிக்கப்பட்டது.** |

**தனி அலுவலர்**
**மணப்பாறை நகராட்சி**